DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.9/2025**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | புவியரசு | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அன்பழகன் | சமயம் | - | |
| கிராமம் | - | வாழைத்தோட்டம் | வயது | - | 41/2025 |
| சாதி | - | | | | |

**<u>14-10-2025</u>**

**( 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை)**

(1 முதல் 3 எதிரிகள் தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் டெனிக்கம்யூனிக்கேசன் நிறுவனத்தில் டெக்னீசியராக வேலை செய்து வருகிறேன். எனது நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள டவர்களில் சரியாக வேலை செய்துவருகிறார்கள் செக்கப்செய்து வருவது எனது பணியாகும். கடந்த 03-11-2023-ம் தேதி மாலை 07.00 மணியளவில் சோலையார்டேம் சஜிதா காட்டேஜ்சில் உள்ள Vodafone நிறுவனத்தில் 2G டவுன்ஆகிவிட்டதாகவும் அதனால் அலராம் வந்துகொண்டிருந்தது. நான் வால்பாறையிலிருந்து வண்டியை எடுத்துக்கொண்டு அங்குசென்றுபார்த்தபோது 2G, 4G உள்ள Equipment பாக்ஸில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. அதில் உள்ள பவர் கேபிள் உடைத்து எடுக்கப்பட்டிருந்தது. ஜென்டேடர்ரில்உள்ள ஸ்டாடிங் கேபிள் உடைத்து எடுக்கப்பட்டிருந்தது. Equipment உள்ள எர்த் கேபிள் உடைத்து எடுக்கப்பட்டிருந்தது. நான் சஜிதா காட்டேஜில் விசாரித்தபோது யாருக்கும்ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். இது சம்பந்தமாக எங்கள் நிறுவர் மேலாளரிடம் தகவல் தெரிவித்தேன். பின்னர் மறுநாள் காலை ஷேக்கல்முடி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.அந்த புகார் மனுவை நானே எழுதினேன். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** காணாமல் போன பொருட்களின் மதிப்பு சுமார் 30 ஆயிரம் ஆகும். மறுநாள் 04-11-2023-ம் தேதி போலீசார் திருடு போன பொருட்களை கைப்பற்றியதாக தகவல் தெரிவித்தார். நான் காவல் நிலையம் சென்று பொருட்களை அடையாளம் காட்டினேன். அப்போது காவல் நிலையத்தில் 3 நபர்களை போலீசார் பிடித்து வைத்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் காப்பர் கம்பிதான் எங்கள் நிறுவனத்தில் டவரிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். **(அந்த காப்பர் கம்பிகள் அ.சா.பொ.1 ஆகவும், சிவப்பு நிற சீலிங்கொண்ட காப்பர் கம்பியுடன்கூடிய ஒயர் அ.சா.பொ.2 ஆகவும், கருப்பு நிற சீலிங்கொண்ட காப்பர் கம்பியுடன்கூடிய ஒயர்அ.சா.பொ.3 ஆகவும், மற்றொரு சிவப்பு நிற சீலிங்கொண்ட காப்பர் கம்பியுடன்கூடிய ஒயர் அ.சா.பொ.4 ஆகவும், சாம்பல் நிற சீலிங்கொண்ட காப்பர் கம்பியுடன்கூடிய ஒயர் அ.சா.பொ.5 (2 எண்ணிக்கைகள்) ஆகவும், கருப்பு நிற சீலிங்கொண்ட காப்பர் கம்பியுடன்கூடிய ஒயர் அ.சா.பொ.6 ஆகவும், குறீயீடு செய்யப்படுகிறது)** எதிரிகளின் பெயர் கண்ணன், ஜெயராஜ், அருள் ஆகும் எதிரிகளை பார்த்தால்

அடையாளம் சொல்ல முடியும்.  இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில்  எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லாததால் எதிரிகளை சாட்சி அடையாளம் காட்ட  முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக கால அவகாசம் கோரப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.